# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1978/4 - 2016 අගෝස්තු මස 01 වැනි සඳුදා - 2016.08.01

*1978/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 7/2016*

**1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டம்**

*1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சஜித் பிரேமதாச,<br>
வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,<br>
*2016, யூலை 27.*

ஒழுங்குவிதிகள்

1. 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்துக்கான அட்டவணை, அதன் 4 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"5. எந்த வளவுகளின் நிலக்கிழார், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது ஒரு மாகாண சபையின் ஏதேனும் நியதிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம், அரசு, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம், ஒரு பகிரங்க அதிகார சபை அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி ஆகவுள்ளதோ அந்த வளவுகள் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தவிர்க்கப்பட்ட வளவுகளாகவிருத்தல் வேண்டும்.

6. எந்த வளவுகளின் வாடகைக் குடியிருப்பாளர், ஓர் உள்ளூரதிகாரசபை, அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது ஒரு மாகாண சபையின் ஏதேனும் நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம், அரசு, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம், ஒரு பகிரங்க அதிகார சபை அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி ஆகவுள்ளதோ அந்த வளவுகள் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தவிர்க்கப்பட்ட வளவுகளாகவிருத்தல் வேண்டும்.".

2. 2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9 ஆந் திகதிய 1305/17 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அதன்கீழ் செய்யப்பட்ட எவற்றிற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

*8- 396*




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.